**OPEN ACCESS**

Manuscript ID: TAM-10032026-10033

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.11.2025

Accepted: 15.12.2025

Published: 01.01.2026

Citation:
Jeyapragash, Thushyanthy Juliyan. "Dance Messages Expressed Through Minor Literary Works." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 41–47.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10033

*Corresponding Author:
julithushy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Dance Messages Expressed Through Minor Literary Works

**Dr. Thushyanthy Juliyan Jeyapragash**
*Senior Lecturer (Department of Dance)*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0003-5287-4199*

**Abstract**
*In the history of Tamil literature, the period that emerged following the Epic Age is known as the Bhakti literary period. This literary period is also referred to as the Prabandha literary period or the Minor Literary period. The Minor Literatures are those works that arose after Bhakti literature by blending internal and external themes separately as subject matter. In these Minor Literatures, the dances of Shiva and Murugan are mentioned, along with references to mudras (hand gestures), musical instruments, and adornments. In this regard, this research paper examines and explains various aspects such as the nature of dance and the manner in which dance is expressed, as mentioned in the songs within Minor Literatures, through the title "Dance Messages Expressed Through Minor Literary Works."*
***Keywords:*** *Minor Literatures, Margam, Desi, Dance, Mudra, Tandavam, Rasa, Koothu*

**References**
1. Raguraman. S, (2006) History of Tamil Dance, Chennai.
2. Ammankili Murugadas, (2006) Sangam Poetry, Tradition and Transformation, Colombo – Chennai.
3. Sivathambi. K, (2005) Drama in Ancient Tamil Society, Chennai.
4. Selvanayagam. V, History of Tamil Literature, Chennai.
5. Gnana Kulendran, (1994) Bharatha Musical Tradition, Krishna Publications, Thanjavur.
6. Karthika Ganesar, (1969) Dance Arts Cultivated by Tamils, Chennai.
7. Saba Jayaraja, (1998) Aesthetics of Bharatanatyam, Colombo.

# சிற்றிலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படும் ஆடற் செய்திகள்

***கலாநிதி துஷ்யந்தி யுலியன் ஜெயப்பிரகாஷ்***
சிரேஷ்ட விரிவுரையாளர்(நடனத்துறை)
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியகாலத்தை அடுத்து தோன்றிய காலம் பக்தி இலக்கிய காலமாகும். இவ்விலக்கிய காலத்தைப் பிரபந்த இலக்கிய காலமென்றும் சிற்றிலக்கிய காலமென்றும் கூறுவர். பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து அகபுற விடயங்களைத் தனித்தனியாகக் கலந்து பாடுபொருளாக்கி எழுந்த இலக்கிங்களே சிற்றிலக்கியங்கள். இச்சிற்றிலக்கியங்களில் சிவன் முருகனின் நடனங்கள் குறிப்பிடப்படுவதோடு, முத்திரைகள், இசைக் கருவிகள், ஒப்பனைகள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றன. அந்த வகையில் 'சிற்றிலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படும் ஆடற் செய்திகள்' எனும் தலைப்பினூடாக சிற்றிலக்கியங்களினூடாகப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடனத்தின் தன்மையையும் ஆடல் வெளிப்படுகின்ற விதம் போன்ற பல்வேறு விடயங்களை ஆராய்ந்து விளக்குவதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

***முதன்மைச் சொற்கள்:*** *சிற்றிலக்கியங்கள், மார்க்கம், தேசி, ஆடல், முத்திரை, தாண்டவம், சுவை, கூத்து*

## முன்னுரை

இலக்கியப் படைப்புகள் மக்களுடைய வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. அக மற்றும் புற மரபுகளை உள்ளடக்கிய விடயங்கள் சிற்றிலக்கியங்களில் சிறப்பமையக் கூறப்பட்டுள்ளன. மனிதன் தனது மனதின் ஆளுமைக்குட்பட்டவன். மனிதனால் உருவாக்கப்பட்ட மொழி இசையும், நடனம், நாடகம் இவையுள் அடங்கி செயற்பட்டு வருகின்றன. எனவேதான் கருத்துவெளிப்பாட்டினிற்கும்கருத்தினைப் பிறர் அறியச் செய்வதற்கும் மனிதன் நடனத்தையும் நாடகத்தையும் சிறந்த ஊடகமாக காலம் காலமாகக் கையாண்டு வருகின்றான். சிற்றிலக்கியக் காலத்தில் தோற்றம் பெற்ற கல்லாடம் எனும் நூலில் ஆடற் குறிப்புகள் குறிப்பிடப் பட்டுள்ளன. கல்லாடத்தைப் போன்றே உலா, பிள்ளைத் தமிழ், பரணி, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கிய வகைகள் நடனத்தைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. இவ்விலக்கியங்களில் பாடுபொருளில் தனிமனித உணர்வை வெளிப்படுத்தும் (ஆங்கிகம், ஆஹார்யம், சாத்வீகம், வாச்சிகம்) எண், பால் சுவைகள், தேசி மற்றும் மார்க்கம், வாழ்க்கை முறை, ஆடல், தத்துவம், மாந்தரனி வாழ்வியல் முறைகளில் பல நிலைப்பட்ட செயற்பாடு கள் போன்றவை காணப்படுகின்றன.

## கல்லாடமும் நடனமும்

கல்லாடர் எழுதிய செய்யுள்கள் என அகநானூறில் ஏழு பாடல்களும், புறநானூற்றில் ஐந்து பாடல்களும் குறுந்தொகையில் இரு பாடல்களும் உள்ளன. அகப்பொருள் மரபினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூலுள் சிவன், முருகன் எனும் இறைவர்களின் நடனங்கள்

குறிக்கப்படுகின்றன. நடனங்களைப் பெயரிட்டுக் கூறுவதோடு நில்லாமல் நடனம் தோன்றியதன் காரணம், நடனம் செய்கின்ற முறை, நடனத்தில் பயன்படுத்தப்பட்ட முத்திரைகள், கால் செயல்கள், இசைக் கருவிகள், ஒப்பனை போன்றன விரிவாகப் பேசப்பட்டுள்ளன. பாடல்கள் மட்டுமே இவ்வாய்வில் சுட்டப்பட்டுத் தேவையான விளக்கங்கள் தரப்படுகின்றன.

**ஊழித்தாண்டவத்தைச் சிவபெருமான் ஆடுகின்றதை**

**"சேய் இதழ் இலவத்து உடைக் காய்ப்**
**பஞ்சி - புகை முரிந்து எழுந்தென**
**விண்ணத்து அலமர குழை பொடி**
**கூவையின் சிறை, சிறை தீந்த -**
**பருத்தும் ஆந்தையும் பார்ப்புடன்**
**தவழ உடைகவட்டு ஓமை உலர்சினை**
**இருக்கும்வளைகட் கூகையும் மயங்கி**
**வாய்குழற" (கல்7:18 - 23)**

என்றும்,

தில்லை வெளியில் பதஞ்சலி, வியாக்ரபாதர் எனும் இருவர் வேண்ட ஆடிய ஆனந்தத் தாண்டவத்தை,

**"புண்ணியம் தழைத்த முன் ஓர் நாளில் - இருவிரல் நிமிர்த்துப் புரிவொடு சேர்த்தி குழை உடல் தலைவிரிகைத்திரி கறங்க ஒருவிரல் தெறித்தும் ஐவிரல்குவித்தும் ஆடிய பெருமான்" (கல்.8:10 - 29 )**

என்றும்,

**"கூடிய கானம் அன்பொடு பரவ புதம் துள்ள பேய்கை மறிப்ப**
**எங்கும் உள உயிரும் இன்பம் நிறைந்து ஆடநாடக- விதியொடு ஆடிய பெருமான்" (கல்.22:57- 60)**

என்றும்,

இறைவன் பாண்டியனுக்காகக் கால்மாறி ஆடியதாக வரும் புராணச் செய்தியை

**"பஞ்சவன் நிறைந்த அன்புடன் வேண்டமாறிக் குனித்த நீறு அணி பெருமான்" (கல்.24:34 - 35)**

என்றும்,

தாரகவனத்து முனிவர் தம் ஆணவம் கெட சிவனார் ஆடிய விந்தை நடனத்தை

**"வெள் உடல் பேழ்வாய்த் தழல் விழி மடங்கல் உரிவை மூடி, கரித்தோல் விரித்து புள்ளி பரந்த வள் உகிர்த்தரக்கின்"**
**(கல்.27: 11 - 18)**

என்றும்,

காளியுடன் ஆடிய தாண்டவத்தை,

**"வடவனத்து ஒரு நாள் மாறுபட்டு எதிர்த்து வழி நடம் தனது மரக்கால் அன்றி முதல் தொழில் பதுமன் முன்னாய், அவ் உழி பாணியில் சிரம் பதித்து, ஒரு நடை பதித்த கொடு கொட்டிக்குக் குறி அடுத்து எடுக்கும்"**
**(கல்.63: 1 - 9)**

என்றும்,

பாண்டரங்கம் எனும் கூத்தினை,

**"தாணும் ஓர் நாடகம் பாண்டரங்கத்து ஒரு பாடுபெற்ற அமைந்த மோகப்புயங்க முறைத் துறை தூக்கி அதற்குச் சாரணி அருட்கரம் ஒன்றில் பாணி இரண்டும் தாளம் ஆக்கி ஒருதாள் மிதித்து விண்உற விட்ட மறுதாள் மலரில் மலர்க்கரம் துடக்கி பார்ப்பதிப் பாணியைத் துடி மணி எடுப்ப புதமும் கூளியும் பேயும் குனிப்ப அமரர் கண் களிப்ப ஆடிய பெருமான்" (கல் 63: 25 34)**

என்றும்,

உலகத்து உயிர்களைத் தன்னுள் ஒடுக்க ஊழித்தாண்டவத்தை இறைவன் செய்கின்றான். அதனை,

**"நெட்டுகிர்க் கருங்கால் தோல் முலைப்**
**பெரும்பேய் அமர் பெற்று ஒன்னலர்**
**அறிவுறப் படர பேழ்வாய் இடாகினி**
**கால்தொழுது ஏத்திக் கையடைக்**
**கொடுத்த வெள் நிண வாய்க் குழவி ஒரு**
**தாள் எழு புவி உருவ திண்தோள் பத்துத்**
**திசையுள் எட்டு அவை உடைப்ப ஒரு**
**நடம் குலவிய திருவடி உரவோன்"**
**(கல்.91:15 - 36)**

என்றும் கல்லாடம் விளக்கியுள்ளது.

கல்லாடம் சிவனார் ஆடியதாகக் கூறியுள்ள பாண்டரங்கம், கொடுகொட்டி, ஊழி, அனந்தம், விநோதம் எனும் தாண்டவங்களை விளக்கியும் அவைகளை ஆடும்போது மேற்கொள்ள வேண்டிய தாளம், ஒப்பனை இவைகளை நன்கு விளக்கியுள்ளது. பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து எழுந்த கல்லாடம் போன்றே அடுத்து எழுந்த சிற்றிலக்கியங்களான பரணி, உலா எனும் இலக்கியங்களும் நடனத்தை எடுத்துக் காட்டியுள்ளன. கல்லாடத்தைப் போன்றே உலா, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி எனும் சிற்றிலக்கிய வகைகள் நடனத்தின் உறுப்புக்களைப் பெற்றிருக்கின்றன.

### கலம்பகத்தின் நடனக் கூறுகள்

கலம்பகம் எனும் இலக்கியம் கலம் எனின் 12, பகம் எனின் 6 எனக்கொண்டு 18 உறுப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு சிற்றிலக்கியமாகும். புய வகுப்பு எனும் உறுப்பு பாட்டுடைத் தலைவனின் புயவலிமையைக் கூறுவதாக அமையும் உறுப்பு. இப்புய வகுப்பைப் புயங்க தாண்டவமாகச் செய்து காட்டுதலை நடனமேடைகளில் காண இயலுகின்றது. தலைவனின் பெருமைகளைக் கூறும் பகுதி நூல் எனும் உறுப்பாக அமையும். அப்பகுதியில் தரவு என்பது பல்லவியாகவும், தாழிசைகள் சரணங்களாகவும் செயல் படுத்தப்பட்டு இன்றைய நடனத்தின் வர்ணம் போன்று செய்து காட்ட முடியும். தலைவன்மீது காதல் கொண்ட தலைவி பருவம் கண்டு இரங்குதல், மாலைக்காலம் கண்டு இரங்குதல், தூது அனுப்புதல் தலைவியின் நிலைக்காகத் தோழி, செவிலி, நற்றாய் இரங்குதல் நிலவைப் பழித்தல், மன்மதனைப் பழித்தல், உருவெளித் தோற்றம் காணல் எனும் துறைகளில் அமைந்த பாடல்கள் அனைத்தும் சிருங்காரச் சுவையைத் தரத்தக்க அபிநய முறையில் அமைந்த பதங்களாகச் செய்ய இயலும். நடனத்தின் சுவைப் பாகுபாட்டினுக்கு உரிய ஒன்பது சுவைகளும் கலம்பகத்தில் நடனத்திற்கென்றே அமைந்துள்ளவை போல் உள்ளன. கலம்பகத்தின் பாடுபொருள்கள் அனைத்தும் தனிமனித உணர்வை வெளிப்படுத்தும் இயல்பில் இருக்கின்றன.

### உலா

உலா என்னும் இலக்கிய வடிவமும் நடனத்திற்குரிய பாடல்களைப் பெற்றுள்ள சிற்றிலக்கியமாகும். வெற்றி வீரனாய் நகரில் உலா வருகின்ற இறைவனையோ மன்னனையோ நகர மக்கள் அனைவரும் காண்பர். இக்காட்சியைத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும் ஒரு துறையாகப் பேசுகின்றன. இலக்கண நூல்கள், "ஊரொடு தோற்றம்" என்றும் கடவுளரையும் மானுடத் தலைவர்களையும் "மானுடப்பெண்டிர் நயந்த பக்கம்" என்று எடுத்து மொழிவதைக் காணலாம். இவ்வாறு உலா வருகின்ற தலைவனைப் பெண்களுள் பேதை, பெதும்பை, மங்கை மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனும் ஏழு பருவங்களில் உள்ள பெண்கள் பார்த்து அவன் மீது காதல் கொள்வதாகப் பாடு பொருள் இருக்கும். ஏழுபருவங்களில் உள்ள பெண்கள் தலைவனை எவ்வாறு விரும்புகின்றனர் என்பதையும் அதற்கு அவர்கள் மேற்கொள்ளும் செயலையும் முக பாவத்தின் மூலமாக வெளிப்படுத்துதல் என்பது உலா இலக்கியத்தின் அமைப்பியலாகும். இவ்விலக்கியம் நடனத்தின் மிக இன்றியமையாத சாத்விக பாவத்தின் வெளிப்பாட்டினுக்குத் துணையாகும் இலக்கியமாகும்.

### பிள்ளைத் தமிழ்

பக்தி இலக்கியக் காலங்களில் வடநாட்டில் கண்ணனை அவனது பிள்ளைப் பருவத்துக் குறும்புகளை இலக்கியமாகப் படைத்து

பாடியும் ஆடியும் வந்தனர். அவ்வாறு அமைந்த இலக்கியமே பிள்ளைத்தமிழ் எனும் தமிழ் இலக்கியமாகும். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தைத் தொல்காப்பியம் ஒரு தலைவனின் பிள்ளைப் பருவத்தைப் பாடுதல் மரபு என்கின்றார். இதனை முதல் முதலில் பெரியாழ்வார் கண்ணன் திரு அவதாரச் சிறப்பு எனும் பெயரில் பாடினார். திருமாலுக்கு அவதாரங்கள் உண்டு என்பதினால் வைணவத்தில் அவர் மீது பிள்ளைத்தமிழ் பாடும் வழக்கம் இருந்தது. சைவத்தில் சிவன் பிறப்பு இறப்பு அற்றவன் எனவே சைவர்கள் முருகன் மீதும் உமையவள் மீதும் பல பிள்ளைத்தமிழ் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். பிள்ளைத்தமிழ் எனும் இலக்கியத்தை ஆண், பெண் எனும் இருபிரிவினருக்கும் தனித் தனியாகப் பருவங்களைப் பகுத்து குழந்தைப் பருவத்து நிகழ்வுகளைப் பாடுதல் மரபு. அம்மரபே பாரதியார் வரை தொடர்ந்துள்ளது. நடனத்தில் குழந்தையின் செயல்பாட்டை தாயின் தாய்மை உணர்வாகிய வாத்சல்யத்தைப் பாவ நிலையில் வெளிப்படுத்தி நடனம் செய்வதற்கு ஏற்றதொரு இலக்கியம் பிள்ளைத் தமிழாகும்.

## தூது

தலைவன் மீது காதல் கொண்ட தலைவி அவனிடம் இயற்கைப் பொருளைத் தூதாக அனுப்பி தனது உள்ளக் கிடக்கையைச் சொல்லி வரச்செய்தல் எனும் பொருளமைப்பில் இவ்விலக்கியம் அமையும். தூது இலக்கியத்தை இலக்கண நூல்கள் "காமம் கழிபடர்கிளவி" என்று பேசும். நடன பாவத்தில் இப்பகுதி விரகதாபம் கொண்டுள்ள தலைவியின் விப்ரலம்ப சிருங்காரம் என்று பேசும். தூது இலக்கியத்தின் பாடுபொருள் முறை தூது செல்ல வேண்டிய தலைவனின் வீரம், சிறப்பு, பெருமை இவைகளை முதலில் கூறுதல் அதனைத் தொடர்ந்து தூது அனுப்ப எடுத்துக்கொண்ட பொருளின் சிறப்பை அபிநயித்து அப்பொருள் ஏனைய பிற பொருள்களைக் காட்டிலும் உயர்ந்தது எனச் சுட்டல், தூதுமொழி எவ்வாறு தலைவரிடம் பேசவேண்டும் என்பது கூறல் போன்ற செயல்களை அபிநயத்தின் மூலமும் கை விரல்களினால் பலகையான முத்திரைகளைப் பிடித்துக் காட்டுதல் போன்ற நடனக் கூறுபாடுகளுக்கு உகந்த இலக்கியமாகத் திகழ்கின்றது.

## பரணி

நடனத்தில் புகழ்க்கூத்து வசைச்கூத்து, விநோதக் கூத்து என்ற வகைகள் உள்ளன என்று சிலம்பும், சிலம்பின் உரைகளும் கூறுகின்றன. பரணி எனும் இலக்கியம் போர்க்களத்தில் வெற்றி பெற்ற மன்னனின் புகழைப் பாடுகின்ற இலக்கியமாகும். போரில் வெற்றி பெற்ற மன்னனின் அவைச் சிறப்பு, போர்க்களச் சிறப்பு இவைகளைக் கூறுதலும், போரினுக்குச் சென்ற வீரர் போர் முடிந்து வருகின்ற வழிபார்த்துக் காத் திருக்கும் தலைவியர் நிலை கூறும் கடைத் திறப்பு எனும் பகுதியும் போரினுக்கு உரிய இறைவியாகிய காளியின் பெருமை கூறுதலும், போர்க்களத்தில் தோற்ற மன்னர்களை இகழ்ந்தும், போர்களத்தில் பேய்கள் கூழ் சமைத்து வெற்றிபெற்ற மன்னனைப் புகழ்ந்தாடுதலும் என்பன நடனத்தின் அகப்பொருள் அபிநயங்களுக்கும் புறப்பொருள் நிருத்தங்களுக்கும் உரிய இலக்கியமாகத் திகழ்கின்றது.

## குறவஞ்சி

நடனத்தை இன்றைய வழக்கில் தேசி என்றும் மார்க்கம் என்றும் இரண்டாகப் பகுத்து அபிநயங்களையும், ஆடல்களையும் செய்து வருகின்றனர். தேசி என்பது வழக்கினைச் சார்ந்த கூறுபாடுகளைத் தன்னகத்தே உள்ளடக்கமாகக் கொண்டுள்ள நடனங்களாகும். இந்நடனம் கிராமியக்

கலைத்தன்மையைக் கொண்டிருக்கும். இத்தகுநடன முறைக்குச் சான்றாக உள்ள இலக்கியம் குறவஞ்சி என்னும் இலக்கியமாகும். குறவஞ்சி எனும் இலக்கியத்தில் இறைவன் உலா வருவான், உலா வரும் இறைவனைத் தலைவி காணுவாள், காதல் கொள்வாள், காதல் கொண்டவள் காமம் கழிபடர்க் கிளவியாக மன்மதனையும் நிலவினையும் பழிப்பாள். பின்னர் குறத்தி கண்டு குறிகூறுதல், தலைவி குறத்திக்குப் பரிசுகள் தருதல் குறத்தி தன் இருப்பிடம் சென்று தனது கணவனான குறவனிடம் உரையாடி இறுதியில் இவரும் இறைவனைப் புகழ்வது எனும் பகுதிகள் இருக்கும். இக்காலத்தில் தேசி அடிப்படையில் நாட்டிய நாடகத்தைச் செய்ய இது போன்ற சிறந்த இலக்கியம் இல்லை எனலாம். குறவஞ்சி இலக்கியத்தில் வட்டார வழக்குகள் வாச்சியகமாக, குறவர் குறத்தியர் பேச்சு செயல்பாடுகள் ஆங்கிக அபிநயமாகவும், குறவர் குறத்தியர் உடைகள் ஆஹார்ய அபிநயத்திற்கும், குறத்தியின் பெருமை, குறி கூறும் சிறப்பு இவைகள் சாத்வீக அபிநயத்தினுக்கும் சான்றாக அமைந்திருப்பதைக் காணலாம்.

### பள்ளு

பள்ளு எனும் இலக்கியம் வேளாண் மக்களாகிய உழவர்களின் வாழ்வியலை எடுத்து மொழியும் நடனமாகும். பள்ளு என்பது பள்ளர் எனும் உழவர்களைப் பற்றி எடுத்து இயம்பும் இலக்கியமாகும். சிலம்பு காட்டிய பதினோரு ஆடல்களில் உள்ள கடைசியர் ஆட்டம் ஆகும். இந்திரனின் மனைவி அயிராணி ஆடிய ஆட்டமென சிலம்பு கூறுகின்றது. பள்ளு எனும் இலக்கியத்தில் பள்ளர் வாழ்க்கை முறை நிலவளம், மழையைப் போற்றல் போன்றவை நிலத்தின் தலைவனான பள்ளனின் வருகை அவனது இருமனைவியர் வருகை, இருமனைவியால் ஒருவர் சைவர் மற்றொருவர் வைணவர் இவ்விருவரும் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்ளுதல் என்பன எல்லாம் நடனத்தின் உறுப்புகளாக அமையும். பள்ளு எனும் நடன நாடகத்தில் உழவர்களின் ஆடை அணிகலன் என்பன ஆஹார்யமாகவும், உழவ மக்களின் உரையாடல் வாச்சிகமாகவும் பள்ளியர் இருவரின் ஏச்சு மொழிகள் நிந்தாஸ் துதியாகவும், உழவ மக்களின் கிராமிய இசைப்பாடல்களும், அப்பாடல்களுக்கு உறுதுணையாக இருக்கும் வாத்தியக் கருவிகளும் நடன நாடகத்தினுக்கு ஏற்புடையதாக அமையும்.

### முடிவுரை

இவ்வாறு பல்வேறுபட்ட சிற்றிலக்கியங்கள் நடன இலக்கியங்களாக இருந்தது போன்று நடனத்தினுக்கென்றே தமிழில் நாடகக் கீர்த்தனைகள் எழுதப்பட்டன. புராண, இதிகாசங்களில் கூறப்பட்ட கதைகளைப் பாடல் வடிவங்களாக இயற்றி, கதைப் பகுதியைப்பலகூறுகளாக்கி, கூறுகளுக்குரிய பாடல்களை மேடையில் அபிநயித்தும் ஆடியும் காட்டுதல் உண்டு. இராமகாதை இராமநாடகக்கீர்த்தனைகளாகவும், பெரிய புராணத்தில் உள்ள நந்தன் சரித்திரம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளாகவும் இயற்றப்பட்டு நடனத்திற்குரிய இலக்கியங்களாகத் திகழ்ந்தன. நடனத்தின் தேவைக்கேற்ப இதிகாச புராண நிகழ்வுகள், செய்திகள் தனித்த பாடு பொருளாக உருப்படிகள் என்ற பெயரில் உருவாகின.

### உசாத்துணை நூல்கள்

1. இரகுராமன்.சே,(2006) தமிழர் நடன வரலாறு, சென்னை
2. அம்மன்கிளி முருகதாஸ், (2006) சங்கக் கவிதையாக்கமும் மரபும் மாற்றமும், கொழும்பு - சென்னை
3. சிவத்தம்பி.கா, (2005) பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், சென்னை

4. செல்வநாயகம்.வி, தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை
5. ஞானா குலேந்திரன், (1994) பரத இசை மரபு, கிருஷ்ணா வெளியீடு, தஞ்சாவுர்
6. கார்த்திகா கணேசர், (1969)தமிழர் வளர்த்த ஆடற்கலைகள், சென்னை
7. சபா ஜெயராஜா, (1998) பரதநாட்டிய அழகியல், கொழும்பு